**வேலூர் மாவட்டம்**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு. க. முனுசாமி, M.A., M.Sc., MBA., B.Ed., M.Phil.,**
**ந.க. எண் 301/SMC/மாஒ6/ஒபக/2022. நாள் : 01.03.2023.**

**பொருள்** : வேலூர் மாவட்டம் - ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி - அனைத்து வகை அரசு பள்ளிகளிலும் மார்ச் 2023 மாதத்திய பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் நடத்துதல் - வழிகாட்டுதல்கள் வழங்குதல் - சார்பு.

**பார்வை** : 1. சென்னை–6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2223/A11/பமேகு/ஒபக/2022,நாள்:01.03.2023.

2. நம்ம School-நம்ம ஊரு பள்ளி உறுப்பினர் செயலாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 002/ஆ6/நஊப/2023, நாள்:28.02.2023.

********

பார்வையில் காணும் சென்னை–6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகளுக்கிணங்க அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம், மாதந்தோறும் முதல் வெள்ளிக்கிழமை கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி நடைபெற்று வருகிறது. **மேல்நிலைப்பள்ளிகளில் செய்முறைத் தேர்வுகள் மார்ச் 1 முதல் 9 ஆம் தேதி வரை நடைபெறுவதால் மேல்நிலைப் பள்ளிகள் நீங்கலாக** தொடக்க, நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் மார்ச் 2023 மாதத்திய பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தினை 03.03.2023 **(வெள்ளிக்கிழமை) அன்று பிற்பகல் 3.00 மணி முதல் 4.30 மணி வரை** நடத்திட அறிவுறுத்தப்படுகிறது.

**பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களின் வருகைப்பதிவு**

பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களின் வருகைப்பதிவினை **தலைவர் மட்டுமே பெற்றோர் செயலியில் (TNSED Parent App)** கூட்டம் நடைபெறும்போது பதிவு செய்தல் வேண்டும். தலைவரது கைபேசி அல்லது பிற உறுப்பினர்களின் கைபேசி மூலமாக வருகைப்பதிவினை பதிவு செய்வதை தலைமையாசிரியர் உறுதி செய்தல் வேண்டும்.

**பள்ளி மேம்பாட்டுத் திட்டம்**

பள்ளி மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கவும் அதை முழுமையாகச் செயல்பாட்டுக்குக் கொண்டுவரவும் பள்ளி மேலாண்மைக் குழு தொகுதியைப் (SMC Module) பெற்றோர் செயலியில் (TNSED Parent App) ஒரு பகுதியாகப் பள்ளிக் கல்வித் துறை அறிமுகப்படுத்தியுள்ளது.

கடந்த மாத பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்திலும், குறைந்த அளவு எண்ணிக்கையிலான பள்ளிகளில் மட்டுமே திட்டமிடுதல் சார்ந்து செயலியில் பதிவு செய்யப்பட்டுள்ளது என அறியப்பட்டுள்ளது. **எனவே, பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் இச்செயலியின் வாயிலாக திட்டமிடுதல் மேற்கொள்வதை தலைமையாசிரியர்கள் உறுதி செய்தல் வேண்டும்.** இச்செயலி சார்ந்த முக்கியத்துவத்தை அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்துமாறு மாவட்ட அலுவலர்கள் APO, DEO, BEO, DC, DIET Faculty கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**திட்டமிடுதலுக்கான கருப்பொருட்கள்**

1. **மாற்றுத்திறனாளி மாணவர்கள் சார்ந்த செயல்பாடு:**

மார்ச் மாதத்திய பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான உள்ளடக்கிய கல்வியில் உள்ள செயல்பாடுகளான மருத்துவ முகாம் மற்றும் வட்டார அளவிலான உள்ளடக்கிய கல்வி மையங்கள் பற்றி தலைமையாசிரியர் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு இணைப்பு 2_ல் கொடுக்கப்பட்டுள்ளவாறு எடுத்துரைத்தல் வேண்டும்.

2. **பள்ளி செல்லா/ இடைநின்ற குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனுடைய குழந்தைகளைக் கண்டறியும் கணக்கெடுப்புப் பணி:**

- ஒவ்வொரு ஆண்டும் 6 முதல் 18 வயதுடைய பள்ளி செல்லா / இடைநின்ற குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறனுடைய குழந்தைகளை கண்டறிய சிறப்புக் கணக்கெடுப்பு பணி நடத்தப்படுகிறது. **இக்கல்வியாண்டில் கணக்கெடுப்புப் பணி 19.12.2022 முதல் நடைபெற்று வருகிறது என்ற தகவல் பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.**
- இக்கணக்கெடுப்பு பணியில் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டு அப்பள்ளியைச் சார்ந்த குடியிருப்புகளிலுள்ள 6 முதல் 18 வயதுடைய பள்ளி செல்லா / இடைநின்ற குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறனுடைய குழந்தைகளை கண்டறிந்து அவர்களை மீளவும் பள்ளியில் சேர்க்க துணை புரியுமாறு கேட்டுக்கொள்ள வேண்டும்.

**3. இல்லம் தேடிக் கல்வி – ஆசிரியர் மற்றும் தன்னார்வலர்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகள்:**

- **தொடக்கநிலை தன்னார்வலராக இருப்பின்:** குறைதீர் கற்பித்தல் குறித்தும், மாணவர்களின் கற்றல்நிலை குறித்தும் தன்னார்வலரும், ஆசிரியரும் கலந்துரையாட வேண்டும்.

• உயர் தொடக்கநிலை தன்னார்வலராக இருப்பின்: மையங்களில் அதிக கவனம் தேவைப்படும் குழந்தைகளின் விவரங்களை தன்னார்வலர் ஆசிரியரிடம் கேட்டறிந்து அவர்களுக்குத் தனிக்கவனம் செலுத்த அறிவுறுத்த வேண்டும்.

• தன்னார்வலர்கள் இல்லம் தேடிக் கல்வி மையத்திற்கு தொடர்ச்சியாக வருகை தராத குழந்தைகளின் பெயர்களை, ஆசிரியரிடம் பகிர்ந்து கொண்டு, அக்குழந்தைகளை தொடர்ச்சியாக மையத்திற்கு வர ஆசிரியர் வழியே ஊக்கப்படுத்த வேண்டும்.

• பள்ளி மேலாண்மைக் குழுக்கூட்டத்தின் போது இது தொடர்பான தகவல்களை பகிர்ந்துகொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

4. போக்குவரத்து / பாதுகாவலர் வசதி:

பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் போக்குவரத்து / பாதுகாவலர் வசதி பயன்படுத்தும் மாணவர்களின் விவரங்கள் அதற்காக வழங்கப்படும் தொகைக் குறித்து தெரியப்படுத்த வேண்டும். போக்குவரத்து / பாதுகாவலர் வசதிக்காக பள்ளிக்கு விடுவிக்கப்பட்ட தொகை, ஓட்டுநர் / பாதுகாவலர் / மாணவர்களுக்கு வழங்கப்பட்ட தொகைக் குறித்து SMC கூட்டத்தில் பகிர்ந்து தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

5. மேல்நிலைப் பள்ளி - மாணவர்களின் உயர்கல்வி ஆலோசனை:

பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கான "நான் முதல்வன் திட்டம்" சார்பாக மாணவர்களின் உயர்கல்வி விருப்பங்கள் அறிந்து கொள்ள ஏதுவாக இணைய வழி படிவம் பூர்த்தி செய்ய கோரப்பட்டிருந்தது. மாணவர்களின் விருப்ப முன்னுரிமை அடிப்படையில் பள்ளிகள் மூலம் உயர்கல்வி ஆலோசனை வழங்க தகவல்கள் பெறுவது இந்த மாதமும் தொடருகிறது.

ஒவ்வொரு மேல்நிலைப்பள்ளிகளிலும் இருந்து பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களில் பத்து மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு கல்லூரிகளுக்கு அழைத்து செல்வது மற்றும் கைக்கு எட்டும் தொலைவில் தான் வாய்ப்புகள் உள்ளன என்பதை நேரிடையாக காண்பித்து அவர்களுக்கு ஊக்கம் அளிப்பது ஆகியவற்றை நோக்கமாக கொண்டு உயர்கல்வி வழிகாட்டல் - கல்லூரிகளுக்கு களப்பயணம் நிகழ்வு நான் முதல்வன் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இதனை தமிழக மாண்புமிகு பள்ளிக் கல்வி துறை அமைச்சர் அவர்களால் 26.02.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டு 27.02.2023 அன்று மாணவர்கள் ஆசிரியர்கள் உதவியுடன் அருகாமை கல்லூரிகளுக்கு சென்று உயர்கல்வி குறித்த தகவல்கள் அறிந்து வந்துள்ளனர்.

மேற்கூறிய செயல்பாடுகள் சார்ந்த தகவல்களை பள்ளி மேலாண்மைக் குழுக்கூட்டத்தில் உறுப்பினர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

**முக்கிய குறிப்பு:**

மேற்குறிப்பிட்ட கூட்டப்பொருள்கள் தவிர்த்து தங்கள் பள்ளி சார்ந்து ஏதேனும் தேவைகள் இருப்பின் அவை சார்ந்த கூட்டப்பொருளையும் சேர்த்து பள்ளிமேலாண்மைக் குழு கூட்டதில் விவாதித்து தீர்மானத்தை செயலி மூலம் மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். திட்ட ஏற்பளிப்பு (PAB) தரவுகள் திட்டமிடல் செயலி மூலம் பெறப்பட்ட தரவுகள் அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளப்படவேண்டும் என்பதால் தவறாமல் அனைத்து பள்ளிகளிலும் திட்டமிடல் செயலிவழியில் மேற்கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பள்ளித் தலைமை ஆசிரியர்கள் இதனை உறுதி செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**பள்ளி மேலாண்மைக் குழு முதன்மைக் கருத்தாளர்கள் – பார்வையாளர்கள்**

மாவட்ட கள அலுவலர்கள் (APO / DEO / BEO / DC / DIET faculty) / பள்ளி மேலாண்மைக் குழு முதன்மைக் கருத்தாளர்கள் / கருத்தாளர்கள் பார்வையாளர்களாக பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் கலந்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். பார்வையாளர்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றி பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் எனத் அறிவுறுத்தப்படுகிறது.

1. பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்ட நாளன்று பிற்பகல் 2.00 மணியளவில் பார்வையாளர்கள் பள்ளிக்குச் செல்ல அறிவுறுத்தப்படுகிறார்கள். பின்பற்ற வேண்டிய அனைத்து வழிமுறைகளையும், கூட்ட நிகழ்வையும் பார்வையாளர்கள் முன்கூட்டியே அறிந்து வைத்திருக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்
2. பள்ளி மேலாண்மைக் குழு குறித்த ஊக்கமூட்டும் காணொலிகள் திரையிடப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.
3. பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் நடைபெற்று முடியும் வரை பார்வையாளர்கள் பள்ளியில் இருக்க வேண்டும்.
4. தேவைப்படும் பட்சத்தில் கூட்டம் சார்ந்த நிகழ்வில் பார்வையாளர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். (வருகைப் பதிவு, திட்டமிடல் செயலி சார்ந்த செயல்பாடுகளில்)
5. பார்வையாளர்களுக்கென தரப்பட்டுள்ள படிவத்தை (Google Form) பூர்த்தி செய்து, கூட்ட நாளன்றே இரவு 8.00 மணிக்குள் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

காணொலிகள்

பள்ளி மேலாண்மைக் குழு சார்ந்த செயல்பாடுகளுக்கான காணொலிகள் (Best Practices Videos), வருகைப் பதிவு மற்றும் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் சார்ந்த செயலியின் காணொலிகளுக்கான இணைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. Attendance: https://bit.ly/SMCAppAttendance
2. Planning Part 1: https://bit.ly/SMCSDP1
3. Planning Part 2: https://bit.ly/SMCSDP2
4. Planning Part 3: https://bit.ly/SMCSDP3
5. Playlist link: https://bit.ly/SMCSupportVideos

**பள்ளித் தலைமையாசிரியர்கள் மேற்காண் காணொலிகளை பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் பார்த்திட வழிவகை செய்தல் வேண்டும்.**

பார்வை 2_ல் காணும் நம்ம School - நம்ம ஊரு பள்ளியின் உறுப்பினர் செயலாளர் அவர்களின் செயல்முறைகளுக்கினங்க பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் அரசுப் பள்ளிகளின் மேம்பாட்டிற்கு, சமூக பங்களிப்பு நிதி (CSR) மற்றும் தனிப்பட்ட பங்களிப்புகளை பெற நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி என்ற பெயரில் தமிழக அரசால் ஒரு நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது இதன் வாயிலாக சேகரிக்கப்படும் நிதியானது தமிழகத்தில் உள்ள அனைத்து 37,558 அரசு பள்ளிகளின் தேவைகளை பூர்த்தி செய்ய வழிவகை செய்கிறது.

சமூக பங்களிப்பு நிதி இணை பெற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் டிசம்பர் 19 2022 அன்று நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி என்ற தனி இணையதளம் தொடங்கப்பட்டு அதற்கான தனி வங்கி கணக்கு உருவாக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது **நம்ம ஸ்கூல் – நம்ம ஊரு பள்ளி** முயற்சியானது பெரு, சிறு மற்றும் குரு நிறுவனங்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் அரசு பள்ளிகளின் மேம்பாட்டிற்கு செயலாற்றிட உறுதுணையாக உள்ளது.

இந்தத் திட்ட பணிகளுக்கு நிதி அளிப்பது, பொருட்களாக வழங்குவது அல்லது தன்னார்வ சேவைகள் புரிவது ஆகியன வாயிலாக அரசு பள்ளிகளின் தேவைகளை சமூக பங்களிப்போடு நிறைவேற்றிட இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த இணையதளம் வாயிலாக பெறப்படும் நிதியானது வெளிப்படை தன்மையுடன் செலவினம் மேற்கொள்ளப்பட்டு அப்பணி நிறைவடைந்த பின் பயனீட்டுச் சான்றிதழ் சார்ந்த நன்கொடையாளருக்கு அளிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அனைத்து அரசு பள்ளிகளுக்கு தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பிற இன்றியமையாத தேவைகள் சார்ந்த தலைமை ஆசிரியர்களால் EMIS இணையதளத்தில் உள்ளீடு செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இதனைத் தொடர்ந்து. அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் நம்ம ஸ்கூல் - நம்ம ஊரு பள்ளி இணையதளம் சார்ந்த ஒரு அறிமுகம் மற்றும் பின் பட வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. அவையாவன:

இனிவரும் காலங்களில் அரசு பள்ளிகளுக்காக தனிநபர், முன்னாள் மாணவர்கள் வழங்கும் நிதி மற்றும் குரு மற்றும் பெரு நிறுவனங்களின் சமூக பங்களிப்பு நிதி (Corporate Social Responsibility) போன்ற எவ்வகை நிதி/ரொக்கம், பொருட்கள் மற்றும் சேவைகள் அளிக்கப்பட்டாலும் அது நம்ம ஸ்கூல் - நம்ம ஊரு பள்ளி இணையதளம் https://nammaschool.tnschools.gov.in/ வாயிலாக மட்டுமே அளிக்கப்படுவதை அனைத்து தலைமை ஆசிரியர்களும் உறுதி செய்திடல் வேண்டும்.

பள்ளியின் மேம்பாட்டிற்காக வழங்கப்படும் நிதி பொருட்கள் சேவைகள் அனைத்தும் **நம்ம ஸ்கூல் - நம்ம ஊரு பள்ளி**யின் இணையதளம் வழியாக மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும் என அனைத்து கல்வித்துறை அதிகாரிகள், மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர்கள் நன்கொடையாளர்கள் மற்றும் நிறுவனங்களுடன் எவ்வித புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளுதல் கூடாது என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஒவ்வொரு பள்ளிக்கும் **நம்ம ஸ்கூல் - நம்ம ஊரு பள்ளி** என்ற பெயரில் ஒரு பிரத்தியேக வங்கி கணக்கு (SNA - SINGLE NODAL ACCOUNT) துவங்கப்பட வேண்டும். இதனை எளிமையாக்க அனைத்து அரசு பள்ளிகளுக்கும் மாநில அளவில் மையப்படுத்தப்பட்ட வங்கி கணக்குகள் துவங்கப்பட்டு மாவட்டங்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

பள்ளி மேலாண்மை குழு மற்றும் தலைமை ஆசிரியர்களால் பள்ளியின் தேவைகள் உறுதி செய்யப்பட்டு அதை மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் புதுப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. நன்கொடையாளர்கள் தாங்கள் விரும்பும் பள்ளியை மேற்கண்ட இணையதளம் வழியாக தேர்ந்தெடுத்து நன்கொடை அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. நன்கொடையாக பெறப்படும் நிதி சார்ந்த விவரங்கள் **நம்ம ஸ்கூல் - நம்ம ஊரு பள்ளி செயலகத்தால் (NS-NOP Secretariat)** மாவட்ட அளவிலான குழு (DLC) மற்றும் பள்ளி மேலாண்மை குழு (SMC) ஆகியவற்றுக்கு அனுப்பப்படும்.

எனவே **நம்ம ஸ்கூல் - நம்ம ஊரு பள்ளி** இணையதளத்தின் முக்கியத்துவத்தை அனைத்து தலைமை ஆசிரியர்களும் உணர்ந்து தங்கள் பள்ளி EMIS Portal _இல் உள்ள NS-NOP பகுதியில் தங்கள் பள்ளிகளுக்கு மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தேவையானவற்றை மட்டும் List-out செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும் இதனை பள்ளி மேலாண்மை குழு வாயிலாக

பொதுமக்கள் அனைவரும் அறியும் வண்ணம் பள்ளி மேலாண்மை குழு கூட்டம் நடைபெறும் பொழுது கூட்டப் பொருளாக **நம்ம ஸ்கூல் – நம்ம ஊரு பள்ளி** (NS-NOP) பற்றியும் விளக்கம் அளித்து பள்ளிகளின் முன்னேற்றத்திற்கு உதவிட அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காண் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி சிறப்பான முறையில் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தினை அனைத்து அரசு தொடக்க / நடுநிலை / உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் நடத்திட அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**இணைப்பு 1:** பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்ட நிகழ்வுகள்

**இணைப்பு2:** மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான கூட்டப்பொருள் சார்ந்த செயல்பாடுகள்

**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**வேலூர் மாவட்டம்.**

01/03/2023

01/03/23

**பெறுநர் :**

சார்ந்த அரசு தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்.

**நகல் :**

1. வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது.
2. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) தொடர் நடவடிக்கைக்காக.
3. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) தொடர் நடவடிக்கைக்காக.
4. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்.
5. அனைத்து வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் (பொ).